புதுச்சேரி அரசு

# அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை

# புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு குழுமம்

3வது தளம், புதுச்சேரி வீட்டு வசதி வாரிய வளாகம், அண்ணா நகர், புதுச்சேரி-5.
தொலைபேசி : 0413-2201256 தொலைநகல் : 0413-2203494

# பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் அறிவிப்பு

புதுச்சேரி அரசு, துறைமுகத்துறை சாகர் மாலா (கடல் மாலை) திட்டத்தின் கீழ் புதுச்சேரி துறைமுகத்தை மேம்படுத்தும் திட்டத்தின் முதல்கட்டமாக, சிறு கப்பல்கள் மற்றும் படகுகள் செல்லும் கால்வாயை தூர்வாரவும் மற்றும் வடிகால் கால்வாய் இடையே தடுப்புச்சுவர் அமைக்கவும் உத்தேசித்துள்ளது. புதுடெல்லி, இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிப்பு எண்.S.O.1533 தேதி :14.9.2006 படி, திட்ட உரிமையாளர் சுற்றுச்சூழல் சான்றிதழ் பெற சம்மந்தப்பட்ட துறையிடம் விண்ணப்பித்துள்ளார். சுற்றுச்சூழல் சான்றிதழ் செயல்முறையின் ஒருபகுதியாக, பாதிக்கப்பட்ட உள்ளூர் மக்களின் குறைகளை அறிந்துகொள்ள பின்வரும் விவரத்தின்படி கருத்துக்கேட்பு கூட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | துறையின் பெயர் மற்றும் முகவரி | திட்ட விவரம் | கேட்புரையின் தேதி மற்றும் நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| 1. | துறைமுகத்துறை புதுச்சேரி அரசு துமாஸ் வீதி, புதுச்சேரி-605 001. | சாகர் மாலா (கடல் மாலை) திட்டத்தின் கீழ் புதுச்சேரி துறைமுகத்தை மேம்படுத்தும் வேலையின் முதல் கட்டமாக சிறு கப்பல்கள் மற்றும் படகுகள் செல்லும் கால்வாயை தூர்வாருதல் மற்றும் வடிகால் கால்வாய் இடையே தடுப்புச்சுவர் அமைத்தல். | 02.08.2019 காலை 10.00 மணி | பழைய துறைமுக வளாகம், துறைமுகத்துறை துமாஸ் வீதி, புதுச்சேரி -605 001. |

திட்ட உரிமையாளர் சமர்ப்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சாராம்ச அறிக்கை மற்றும் வரைவு சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையின் நகல்கள் கீழ்கண்ட அலுவலகங்களில் கிடைக்கும். இதனை அனைத்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

1. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, புதுச்சேரி.
2. பொதுப்பணித்துறை, புதுச்சேரி.
3. உள்ளாட்சித்துறை, புதுச்சேரி.
4. துறைமுகத்துறை, புதுச்சேரி.
5. மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, புதுச்சேரி.
6. மாவட்ட தொழில் மையம், தட்டாஞ்சாவடி, புதுச்சேரி.
7. புதுச்சேரி நகராட்சி, புதுச்சேரி.
8. அரியாங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்து, புதுச்சேரி.
9. சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் பிராந்திய அலுவலகம், தென்கிழக்கு மண்டலம், சென்னை.
10. புதுச்சேரி மாசு கட்டுப்பாட்டு குழுமம், 3-வது தளம், புதுச்சேரி வீட்டு வசதி வாரிய வளாகம், அண்ணா நகர், புதுச்சேரி-5.

திட்ட உரிமையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சாராம்ச அறிக்கை மற்றும் வரைவு சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையின் நகல்கள் புதுச்சேரி மாசுகட்டுப்பாட்டு குழுமத்தின் **http://dste.py.gov.in/ppccmain.htm** என்ற இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை பற்றிய கருத்துக்களை சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் மேற்குறிப்பிட்ட புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு குழும முகவரிக்கு எழுத்து மூலமாக அனுப்பி வைக்கலாம் அல்லது கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துக்களை தெரிவிக்கலாம்.

' தூய்மையான இல்லம், தூய்மையான வீதி மற்றும் தூய்மையான நகரம் கொண்டிருப்போம் '

**உறுப்பினர் செயலர்**
புதுச்சேரி மாசு கட்டுப்பாட்டு குழுமம்.

No.083/DIP/AD(Press)/2019-20

Dinamalar 03.07.19